நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.90 /2019

அரசு தரப்புக்காக அ. சா.9 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 7 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2026.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.21 )

நான் தற்போது விருத்தாசலம் தாலுக்கா சாராயகாரத்தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன அம்சவள்ளி, நந்தினி ஆகியோர்களை பார்த்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு 6–ஆம் மாதம் 28 ஆம் தேதி விருத்தாசலம் போலிசார் இவ்வழக்கில் இறந்துபோன அம்சவள்ளி என்பவர் வீட்டிற்கு இரவு 08.00 மணியளவில் அம்சவள்ளி வீட்டை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக நானும் பாலாஜி என்பவரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்னர்

வீட்டிலிருந்து போலிசார் Fanta பாட்டில், சிறிதளவு பெட்ரோலுடன் கூடிய பூஸ்ட் பாட்டிலையும், எரிந்த நிலையில் இருந்த ஒரு நைட்டி, ஒரு புடவை, ஒரு பிளவுஸ், ஒரு தீப்பெட்டி ஆகியவற்றை போலிசார் கைப்பற்றினார்கள். அதற்கு சாட்சியாக நானும் பாலாஜி என்பவரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது). என்னிடம் காட்டப்படும் சுமார் 50 ml லிட்டர் பெட்ரோலுடன் கூடிய பூஸ்ட் பாட்டில் ஒன்றும், சுமார் 50 ml பெட்ரோலுடன் கூடிய Fanta கூல்டிரிங்க்ஸ் பாட்டில் ஒன்றும், எரிந்த நிலையில் வெள்ளை காப்பி பச்சை கலர் புடவை ஒன்றும், எரிந்த நிலையில் நைட்டி சிறிதளவு, எரிந்த நிலையில் காப்பி கலர் ஜாக்கெட் சிறிதளவு, YAT தீப்பெட்டி ஒன்று ஆகிய பொருட்கள் தான் போலிசார் கைப்பற்றிய பொருட்கள் ஆகும்.

1) சுமார் 50 ml லிட்டர் பெட்ரோலுடன் கூடிய (பெட்ரோல் ஆவியாகி விட்டது) பூஸ்ட் பாட்டில் ஒன்று **அ.த.பொ.சா.2** ஆகவும்,

2) சுமார் 50 ml பெட்ரோலுடன் கூடிய (பெட்ரோல் ஆவியாகி விட்டது) Fanta கூல்டிரிங்க்ஸ் பாட்டில் ஒன்று **அ.த.பொ.சா.3** ஆகவும்,

3) எரிந்த நிலையில் வெள்ளை காப்பி பச்சை கலர் புடவை ஒன்று **அ.த.பொ.சா.4** ஆகவும்,

4) எரிந்த நிலையில் நைட்டி சிறிதளவு **அ.த.பொ.சா.5** ஆகவும்

5) எரிந்த நிலையில் காப்பி கலர் ஜாக்கெட் சிறிதளவு **அ.த.பொ.சா.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் குடியிருக்கும் இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 50 மீட்டர் இருக்கும். சம்பவ இடத்திற்கு அருகில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் 50 வீடு இருக்கும். என்னுடைய வீடு முதல் வீடு மூன்றாவது வீடு சம்பவ வீடு. போலிசார் காலையில் சம்பவ இடத்திற்கு வந்தபோது காலையில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். நான் காலையில் ஒரு கையெழுத்தும் இரவு ஒரு

கையெழுத்தும் போட்டேன். அம்சவள்ளியின் தம்பி மணிகண்டன் எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். Fanta பாட்டில் உருகிய நிலையில் இருந்ததா என்றால் இல்லை. நான் எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து போட்டேன் என்றும் என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்ப்படவில்லை என்றும் எந்த ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மணிகண்டன் என்னுடைய நண்பர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டபடி பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்க்கும்போது Fanta பாட்டில் மூடியுடன் இருந்ததாக என்றால் அதை நான் கவனிக்கவில்லை.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 11.42)

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 04 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.